### *Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Estabished: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 31th JULY, 1981 No. 31

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



### *Subscription*

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.


## St. Thomas' College Prize Giving

"Schools like St. Thomas' have come to a positon where they must question how free they actually are. The heirarchy of the department of Education refuses to recognise what many private schools stand for" said the Warden of St. Thomas in his Report he presented on 28-7-81 on the occasion of the College Prize Giving.

Dr. Stanley Kalpage, Secreto the Ministry of Higher Education, the Chief Guest, said that he was proud that St. Thomas' was not guilty of measuring the success of the college by the numbers it sent to the University.

Mrs. Kalpage distributed the Prizes. Jeevan Thiagarajah, the Head Prefect proposed the Vote of thanks.

## Appointed Justice of the Peace

*Mr. J. M. Sabaratnam B. A. (Lond.)* Manager of the Mercantile Credit Ltd. Jaffna has been appointed a Justice of the Peace by the Ministry of Justice.

Mr. Sabaratnam holds a large place in the life of the Community in Jaffna. He is on the Executive Committee of the JDCSI and a member of the Liturgy Committee of the CSI synod. He is also one of the Directors of Jaffna College.

*Mr. R. N. Sivapragasam,* attorney at-law, Mallakam has been appointed a Justice of the Peace by the Ministry of Justice. Mr. Sivapragasam is the *Editor of the "Hindu Organ"* and President of the Saiva Paripalana Sabha.

*Jaffna YMCA*

## Shakespeare Drama Competition 1981

For the third year in succession, the Lions Club of Jaffna has sponsored the YMCA Shakespeare Drama Competion.

There were eight entries and five were selected for the finals. For the first time the Competition was extended to co-educational schools. Jaffna College was the Winner.

Among the boys' schools, St. Johns got the first place while Pt. Pedro Methodist College Girls' School came first for the third year in succession among the Girls' Schools.

The following were awarded Prizes for the best performance:

Devarajan Gnana Oliver, (Jaffna College).

Joy Devakadacham, (Methodist Girls' College, Pt. Pedro).

M. A. Arulanantham, (St. Patricks' College)

*For the Record*

## SLFP accused of supporting "Eelam"

President Jeyawardene addressing the Executive Committee of the All Ceylon UNP Women's Union, at Ramakrishna Hall, Wellawatte said that in Trincomalee the TULF polled 2304 votes more than the UNP at the DDC Election. In 1977, the SLFP polled in the Trincomalee district 20,841 votes. If one fourth of these votes had been given to the UNP in 1981, the Chairman would have been one "who did not advocate the division of the country".

The President affirmed that *Eelam* had received support from the present SLFP leadership in Trincomalee and the rest of the Eastern Province.

"When they are in office, they jail the TULF leadership, govern the North and East under emergency and postpone the Chelvanayakam bye-election. When in opposition they help the establishment of *Eelam.*

## Anglican Synod on a controversial issue

The Church of England General Synod has decided that "there are circumstances in which a divorced person may be married in Church during the life time of a former partner".

Currently such marriages are forbidden. If a subsequent Synod approves the necessary changes in Church of England procedures — something by no means certain — 1983 is the earliest estimate of time when the new policy would go into effect.

*Personal*

*Miss Shanti Navaratnam* won the Best Performance prize at the Music Competition held on 30-7-81. She is a second year senior student at the Christian Medical College Vellore.

She also won earlier the Music Prize awarded by the Lions Club of Vellore.

She is the daughter of Dr. and Mrs. Joseph Navaratnam of *Alexander Villa* Manipay and is an old girl of Uduvil girls College and Women's Christian College, Madras.

*Rubini Rajaratnam* has been selected for admission to the Christian Medical College Vellore this year. She is the daughter of the late Mr. M. Rajaratnam retired Assistant Commissioner of Housing, Jaffna and Mrs. Rajaratnam of Erlalai South.

She is an old girl of Uduvil Girls College and the Womens Christian College, Madras.

*India*

## CMC and H Vellore

*The Schell Eye Hospital's new building* was dedicated recently in a service led by Rev. A. C. Oommen, Dean of Religions work and attended by a large number of the staff and students. The official public opening ceremony will be perfomed by the Prime Minister, Mrs. Indra Gandhi.

The new spacious building has been made possible through the beneficence of Christoffel — Blinden Mission in Germany.

*The Mary Taber Schell Hospital* was Ida Scudder's *first hospital* in 1902 established with a donation from Mr. Schell, an American who wanted it to be a memorial to his wife.

It became an Eye Hospital in 1941 with 14 beds under Dr. S. Gurupatham, a pioneering and dedicated Opthalmolagist who later became Health Minister of Madras.

The present head is Dr. Anna Thomas and some 300 to 400 patients attend the hospital everyday for treatment. Dr. Anna Thomas has made special mention of Dr. A. N. Fenn's contribution to the building project.

## Report on Damages

Mr. Yogendra Duraiswamy before he relinquished his duties as G. A., Jaffna has handed over to the authorities his report on the damages caused to lives and property in Jaffna. He has recommended that a compensation of Rs. 1.5 million be given for the damages caused to the Jaffna Public Library.

*IN BRIEF*

O *Education and the DDC* — "The role of the DDC in the sphere of Education of the District is not as yet clear. As the DDC Council begins to function, it will be possible to guage the extent to which the District Development Council can control the education of the District", said Mr. Tharmalingam M. P. for Manipay at the Cultural Festival organised by the Inuvil A. M. school.

O *Science Graduates*: The Government has decided to recruit 46 Science and Mathematics graduates in the *Tamil medium* before the beginning of the year (1982) for teaching posts in State Schools. They will be posted to schools where there are Advanced Level classes.

O *W C C Central Committee*: The 1981 Meeting of the Central Committee of the World Council of Churches will meet in Dresden (G D R) from August 17 to 26 The new style of preparations for the 1983 W C C Assembly in Vancouver Canada will be discussed at this meeting.


## St. John's College & Chundikuli Girls' College, Jaffna.

### ADMISSIONS — 1982

1. Vacancies (St. John's College) **Only** in the following Grades: One, Four, Six and Nine.
2. Vacancies (Chundikuli Girls' College) **Only** in Grades: One and Six.
3. Children born between 1-2-76 and 31-1-77 will only be considered for admission to Grade One.
4. Pupils to be considered for admission to Grades Four, Six and Nine should be below the age of ten, twelve and fifteen respectively.
5. Apply before 15th September on forms available from the respective Schools from the 1st of September 1961.
6. Please send stamped addressed long envolope and Postal Order for Rs. 2/- per Form.
7. Admission Test (for Grades Four, Six and Nine only) at 8.30 a. m. on Saturday 10th October 1981.
8. Scholarships available for pupils who do exceptionally well at the admission test.

**Principal.**


## IN MEMORIAM

IN LOVING MEMORY

OF

**Rose Gnanamanie Rajakulasingham**

Departed: 14th August 1974.

*Gone from us but leaving memories,*
*Death can never take away,*
*Memories that will always linger*
*While upon this earth we stay.*

Affectionately remembered by her husband and son.

71, Groussault Road, Chundikuli.

## Uduvil Girls' College

Melo Sugunarajah, an advanced Level Student at Uduvil Girls' College will be leaving for Nebraska U.S.A. on 13-8-81 on an American Field Scholarship awarded to her. She will be away for one year.

This is the first time that a Student from Uduvil Girls' College has won this scholarship.

She is the daughter of Rev. and Mrs. N. W. G. Sugunarajah of Uduvil.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 141 ] 31 — 7 — 1981 [ இதழ் 31


## சபை செயலாற்ற வேண்டும்

ஆசியக் கிறிஸ்தவப் பேரவையின் ஏழாவது மகாநாடு இற்றைக்கு இரண்டு மாதங்கள் முன்னதாக பெங்களூர் நகரில் நடைபெற்றது. இதன் சார்பாய் ஏற்கெனவே தரப்பட்ட வோர் வெளியீடு இப் பேரவையைச் சேர்ந்த சபைகளிருக்கும் பத்தொன்பது நாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றிற்காய் ஏறெடுக்கப்பட் வேண்டிய மன்ருட்டு விடயங்களைக் கொடுத்திருந்தது.

இவ்விடயங்களிற் பெரும்பாலானவை சபைகளிலும் நாடுகளிலும் காணப்படும் பிரிவினைகள் நீங்கிச் சமாதானமும் ஒற்றுமையும் நிலைப்பதற் கேதுவாய்த் திருச்சபை பணியாற்றக் கர்த்தரின் ஆவியானவர் அருள வேண்டுமென்பதற் கானவை. இது குறிப்பிடத் தகும்.

திருச்சபை இகத்தையும் பரத்தையும் இணைப்பது மாத்திரமல்ல. இகத்திலேயே சாதிகளையும் சனங்களையும், பல்வேறு பாஷைகள், வழமைகளைக் கொண்டவர்களையும் ஒருங்கிணைத்துப் பரத்தின் ஒன்று சேர்ந்த பிரசைகளாய் ஆக்குவது அதற்கருளப் பட்ட கடமை.

சாதாரணமாய் மனிதரைப் பிரித்து வைக்கும் சாதி, பாஷை, கலாச்சாரம் சார்ந்த பேதங்களையும் பிற வேறுபாடுகளையும் கடந்து நிற்பது திருச்சபை. சகலரும் இறைவன் சிருஷ்டிகளெனவும் அவரடி தொழுவதே அனைவர்க்கும் பொதுவான இலட்சியமெனவும் கொண்டிருக்கும் இச்சபை பேதங்களால் உண்டாகும் பகைமையைக் கண்டிப்பதும் அதன் தீய விளைவுகளை அகற்ற முயற்சிப்பதும் தன் தலையாய கடமையெனக் கண்டுகொள்ள வேண்டும் இதற்கான ஆற்றலை அளிக்க வல்லவர் ஆவியானவரே.

முன் கூறிய வெளியீட்டில் இலங்கையைப் பற்றியதாய்க் கொடுத்திருப்பது சுதேச, சமய, சாதீ உடன்பாடு நிலைப்பதற் கேற்ற நீதியும் நேர்மையுமான சமுதாயம் ஒன்றை உருவாக்கக் கிறிஸ்துவின் சபையான நாம் பெருமுயற்சி எடுக்க வேண்டும் என்பதற்கான மன்ருட்டு. இது நமது காலத்திற்கும் நிலைக்குமுரிய ஒரு மன்ருட்டென நாம் இடித்துரைக்க வேண்டியதில்லை.

இலங்கையில் நிலவும் பேத மனப்பான்மைகளையும் பகைமையையும் தகர்த்தெறிய உதவுவது இலங்கையின் திருச்சபை ஒன்றே. இதை ஓரளவாகிலும் சபை உணர்ந்து கொண்டதென்பதற்கையமில்லை. சற்று முன்பாக வட பகுதி தீப்பற்றி எரிந்தபோது பிற பகுதிகளிலிருந்து சபைத் தலைவர்கள் வந்ததைக் கண்டோம்; அவர்கள் தைரியத்தையும் கரிசனையையும் மெச்சுகிறோம். இவ்வாறன சம்பவங்கள் ஏற்பட்டால் மாத்திரம் திருச்சபை தன் கரிசனையைக் காட்டுவது போதாது.

தமிழ் மக்கள் கொண்டிருக்கும் குற்றங் குறைகளைக் கேட்டறிய, அவர்கள் தேவைகளை ஆராய இன்னமுந்தான் எவரேனும் முன்வரவில்லை, வட்ட மேசை மகாநாடு வாய்ப் பேச்சாய் மாத்திரமே இருக்கிறது. ஊரைக் கெடுக்கும் கேள்விச் செவியன் போலக் கேட்டதெல்லாம செய்தியெனக் கூறி மக்கள் ஆவேசத்தைத் தூண்டிவிடும் தலைவர்களைத் காண்கிறோமே தவிர வேறல்ல. இந் நிர்ப்பந்தக் கட்டத்தில் திருச்சபைத் தலைவர்களாவது ஒன்று கூடி, நேருமுகமாய்க் கலந்தாலோசிப்பதும், வழிகளை வகுத்து ஆட்சிப் பீடத்திற்கு ஆலோசனை கூறுவதும் அவசியமல்லவோ? அவர்களைத் தவிர வேறெவரும் இதைச் செய்வது அசாத்தியம்.

இறைவனின் ஒன்று பட்ட மக்களாய்ச் சிங்களக் கிறிஸ்தவரும் தமிழ்க் கிறிஸ்தவரும் ஒற்றுமையைக் காண பொதுவான வழிபாடுகளில் இடையிடையே கலந்து கொள்ள எவரேனும் இந்த மட்டும் வழி காணவில்லையே! தத்தம் சபைகளிற் றானும் ஒற்றுமைக்காய் — சகோதர சிந்தைக்காய் — மன்றாடுகிறோமா வெனில் அதுவுமில்லை.

திரும்பவும் மோசடிகள் ஏற்பட்டால் பார்ப்போ மென்றிருப்பது புத்தியல்ல. ஒரே இறைவனின் ஒன்றன மக்களாய்த் திருச்சபை அனைத்தும் இலங்கையின் ஒற்றுமைக்கும நல்வாழ்வுக்கும் துரித கிரியையாற்ற வேண்டும் அதற்காக ஆவியானவரின் துணையை நாட வேண்டும். அவரே காரியங்களை நடப்பிக்க வல்லவர் — நமக்கூடாக.

---

செய்திகள்

### யாழ்ப்பாணத்தில் இராணுவத் துறைகள்

சமீபத்தில் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டுப் பலவகையான துப்பாக்கிகளும் அவைகளுக்கு உபயோகிக்கப்படும் குண்டுகளும் சூறையாடப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாநிலத்திலுள்ள அநேகம் பொலிஸ் நிலையங்கள் இராணுவத் துறைகளாய் மாற்றப்பட்டுள்ளன. பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் மேலும் நடைபெறுதபடி இப்பாதுகாப்பு முறை கையாளப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது. பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதற்காக இன்னும் நூறு காவற் றுறையினர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். இராணுவத் துறைகளாய் மாற்றப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களில் இராணுவத்தினரே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்

ஆனைக் கோட்டைப் பொலிஸ் நிலையத்திலிருந்து அபகரிக்கப்பட்ட துப்பாக்கிகளிற் சில மிகவும் சக்தி வாய்ந்தவை; புதிய வகையானவை. இப்பேர்ப்பட்ட துப்பாக்கிகள் பயங்கரவாதிகள் வசத்தில் இப்போது இருக்கிறபடியினால் பாதுகாப்பு நடவடிக்கைகளும் அதற்கேற்றவாறு மிகவும் அதிகரிக்கப்படுமென அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

### வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழி

மிகவும் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவை ஓரளவு குறைப்பதற்கேற்ற சில திட்டங்களை வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அமைச்சரவைக்குக் கொண்டு வரவிருப்பதாய்த் தெரிகிறது,

இத் திட்டங்களில் ஒன்று வர்த்தகத் துறையில் ஈடுபடும் கூட்டுத் தாபனங்களுக்கு அவைகளின் வங்கிக் கடன் வட்டியில் ஒரு பகுதியை அரசாங்கமே கொடுத்துதவுவது இது கூட்டுத் தாபனங்களுக்குப் பெருமளவு உதவியாகும் எனக் கூறப்படுகிறது. மொத்த விற்பனைக் கூட்டுத் தாபனம் மாத்திரமே வருடவீதம் சுமார் 410 லட்சம் ரூபாவை வட்டியாகச் செலுத்திக்கொண்டு வருகிறது இப்படியான நிறுவனங்களுக்கு வட்டியில் ஒரு பாகத்தை அரசாங்கம் கொடுத்துதவுவது நேரடியாக மக்களுக்குக் கொடுக்க வேண்டியதாயிருக்கும் மானியத்திலும் பார்க்கக் குறைவாகவே இருக்குமெனவும் சொல்லப்படுகிறது.

பொதுமக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான இன்னொரு திட்டம் சீனி, மா, பால் மா போன்ற அவசிய உணவுப் பொருட்களுக்கு இரண்டு படியிலான விலைகளைக் குறிப்பது. இதன்படி நேரடியான பாவனையாளருக்கு இவைகள் குறைந்த விலையில் விற்கப்படும், வேறு பண்டங்களைத் தயாரித்து விற்பவர்களுக்கு இவற்றின் விலை கூடியதாயிருக்கும், இத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுமாயின் சனங்களுக்குப் பெரும் உதவியாகும் என நம்பப்படுகிறது.

---

## கடவுள் ஜீவனாய் இருக்கிறார்

*யோவான் 14 : 6*

— R. K. தியாகராசா —

புதிய ஏற்பாட்டில் கடவுளைப் பற்றியும் அவர் என்ன என்பதைப்பற்றியும் நான்கு பெரிய வாக்கியங்கள் கூறப்படுகின்றன. அவை கடவுள் ஜீவனாய் இருக்கிறார். கடவுள் ஒளியாய் இருக்கிறார், கடவுள் அன்பாய் இருக்கிறார், கடவுள் ஆவியாய் இருக்கிறார் என்பனவகளே. சங்கீத புத்தகத்திலே, கடவுளே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா கடவுளின் மேல் ஜீவனுள்ள கடவுளின் மேலேயே தாகமாயிருக்கிறது என்று எழுதப்பட்டிருப்பதைப் பல முறையும் வாசித்துத் தியானித்திருப்போம். கடவுள் முதலில் நம்மைத் தேடுவதினாற்றான் நாமும் அவரைத் தேட விழைகிறோம். தம்மை நமக்குத் தெரிவிக்கும் கடவுளாய் இருப்பதினால் நாம் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் அவர் தம்மைக் கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தினார். சொற்கள் இல்லாமல் நம்மால் சிந்திக்கமுடியாது. ஆகையினால் கடவுள் மனித பாஷையிலேயே தம்மைப் பற்றி நமக்கு வெளிப்படுத்தினார்.

(2) கடவுள் என்பது நம் மனதிலுள்ள ஒரு எண்ணம் அல்ல. கடவுள் இவ்வுலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் காரணராய் இருக்கிறார். தமது சொந்த ஜீவனையும் தம் கிரியையின் மூலம் வெளிப்படுத்துகிறார். கடவுள் நாம் தேடிச் சென்றடையும்படி உலகிற்கு ஆதாரமாகி மௌனமாக இருக்கும் ஒரு பொருள் அல்ல. அவர் நம்மைத் தேடி வரும் ஒருவர். அவர் நம்மிடம் கேள்விகள் கேட்கிறார். நாம் அவற்றிற்கு விடையளிக்க வேண்டும். அவர் நமது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். அதை அவருக்கு நாம் கொடுக்க வேண்டும். விசுவாசம் மாத்திரமல்ல. கீழ்ப்படிதலையும் என்பதை நாம் பலமுறையும் மறந்துவிடுகின்றோம்.

(3) " கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். கடவுளின் சாயலாகவே அவனைப் படைத்தார் ". ஆதி 1 : 27, அவர் கடவுளாகவும் நாம் மனிதராகவும் இருந்தாலும் அவர் நமக்கு முற்றிலும் புறம்பானவரல்ல என்பதே இதன் பொருளாம். நாம் அவருக்குச் சொந்தமானவர்கள். அவர் நமக்குச் சொந்தமானவர். ஏனெனில் நமது கடவுளாகவே இருப்பது அவரின் சித்தமாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மூலம், கடவுள் தாமே இவ்வுலகிற்கு வந்து மனிதர்களுக்கிடையில் ஓர் மனிதனாக வாழ்ந்தார். மனித வாழ்க்கை எப்படிப்பட்டதென்பதை அனுபவித்து அறிந்தார். இவ்விரு சம்பவங்களும் நமக்குப் போதிப்பதென்ன? கடவுள், தமக்காக நம்மைச் சிருஷ்டித்தார் என்பதாம்.

கிரியை செய்யுங் கடவுள் :-

(4) யூதர்கள் ஏன் கடவுளை ஜீவனுள்ள கடவுள் எனக் குறிப்பிட்டார்கள். அவர்கள் உண்மையான கடவுளாகிய தங்கள் கடவுளைப் பொய்யான தெய்வங்களினின்றும் வேறுபடுத்தவே அவ்வாறு கூறினர். பொய்யான தெய்வங்களைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி (41 : 22; 46 : 6 — 7) அழகாகக் கூறியுள்ளார். உண்மையான கடவுள் எங்கும் கிரியை செய்து கொண்டிருக்கிறார். அவர் கேட்கிறார், பதில் சொல்லுகிறார், இரட்சிக்கிறார்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அரிஸ்ரோற்றில் என்ற கிரேக்க தத்துவ ஞானி கடவுளைப் பற்றி எழுதியுள்ள சில வாக்கியங்களைப் பாருங்கள். " கடவுள் எல்லாப் பொருள்களையும் இயக்கி, ஆசைக்குரிய பொருள் ஆசைப்படுபவர்களைத் தன்னிடத்திற்கு இழுத்துக்கொள்வதுபோல எல்லாவற்றையும் கவர்ந்துகொள்கின்றார். கடவுள் ஒன்றுக்கும் ஆசைப்படுவதில்லை. அவர் உலகத்தை விட்டு மறுபக்கம் திரும்பிக்கொள்கிறார். எனினும் எல்லாப் பொருள்களும் தம்மால் முடிந்தவரை மிக உயர்ந்த நிலையைய நாடுவது இயற்கையாதலால், அவையெல்லாம் அவரால் கவரப்படுகின்றன. ஆனால் இத்தகைய கடவுளால் நமது பிரார்த்தனைகளைக் கேட்டு, அவற்றிற்குப் பதிலளித்து, நம்மை இரட்சிக்க முடியாது ". இதிலிருந்து நாம் அறிவது என்ன? நமது கடவுட் கொள்கையை நாம் யூதரிடமிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டும், அவை பழைய, புதிய ஏற்பாடுகளில் விபரிக்கப்பட்டுள்ளன என்பதே.

(5) சிருஷ்டியே கடவுளின் முதல் தெய்வீகச் செயல் என வேதாகமம் கூறுகின்றது. " ஆதியில் கடவுள் வானத்தையும் பூமியையும் படைத்தார் ". (ஆதி. 1:1) படைத்தார் என்னும்போது முதலில் கடவுள் மாத்திரம் இருந்தார். வேறொன்றும் இருக்க

( 3-ம் பக்கம் பார்க்க )

## செய்திகளின் சாரம்

### தெங்குப் பொருள் ஏற்றுமதி

அமெரிக்க காட்பெரிகம்பெனி சொக்சொலேட் மிட்டாய் தயாரிப்பதற்கு இலங்கையின் தேங்காய்த் துருவலைப் பரீட்சை பார்த்துக் கொண்டிருக்கிறது. இதற்காக நூறு மூட்டை தேங்காய்த் துருவலைத் தெங்குப் பொருள் அபிவிருத்தி அமைச்சு ஏற்றுமதி செய்துள்ளது.

* * *

### சிறு பிள்ளை விற்பனை

இந்தோனிசியாவில் சில நகரங்களில் புறநாட்டவர்க்குப் பிள்ளைகளை விற்கிறார்களாம். பெருமளவில் இப்பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து திருடப்பட்ட பிள்ளைகள். இவைகளை சில நிறுவனங்கள் 40,000 ரூபா தொடக்கம் ஐந்து லட்சம் ரூபா வரையுமான விலைக்கு வாங்கி வைத்து, தேடி வரும் புற நாட்டவர்க்கு அதிக விலைக்கு விற்றுப் பெரும் இலாபம் சம்பாதிக்கிறார்கள் எனச் செய்திகள் கூறுகின்றன.

---

## கடவுள் ஜீவனுய் இருக்கிறார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. பின்பு அவர் உலகைப் படைத்தார் என்பதே அதன் பொருள். இதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது ஏனெனில் இதுபோன்ற ஒன்றை நாம் ஒரு போதும் செய்ததில்லை. ஆனால் எப்பொழுதாவது சில சமயங்களில் நாம் இதற்குச் சமீபத்தில் வருகின்றோம். படைத்தல் தொழிலுக்கு மிகச் சமீபத்தில் வருபவன் இரசங்களை இயற்றுபவனே. அவன் இயற்றுவதற்கு முன்னை காற்று இருந்தது. வாயிதழ்கள் இருந்தன, குறியீடுகள் இருந்தன. படைத்தல் கடவுளின் சந்தோஷத்தில் ஒரு பகுதி போலும். இது உண்மையானால் "கடவுள் ஏன் உலகத்தை உண்டாக்கினார்" என்ற கேள்விக்கு ஒரு பதில் நமக்குக் கிடைத்துவிட்டது.

ஆதியில் கடவுள் உலகத்தை உண்டாக்கினார் என்று சொல்லும்போது, அதை அவர் உண்டாக்கிவிட்டுப் பின்பு அது தானாகவே இயங்கட்டும் என விட்டுவிட்டார் என்பது பொருளல்ல. கடவுள் உலகத்தை உண்டாக்கி அது நல்லது எனக் கண்டார். உலகத்திற்குள் தீமை புகுந்துவிட்டது என்பது உண்மைதான். ஆயினும் கடவுளால் கவனிக்கப்பட்டு, அன்பு செலுத்தப்படும். அவரது உலகமாகவே இன்றும் இருக்கின்றது. "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" (யோவான் 5 : 17) என்று இயேசு அறிவித்தார்.

கடவுள் எப்பொழுதும் உலகில் கிரியை நடத்தி வருகிறார். அவர் ஒவ்வொரு நிமிடமும் அதைக் கவனித்து வருவதினால்தான் அது அழியாமல் இருக்கிறது. "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப். 17 : 28) ஒரு கிறிஸ்தவன் எல்லாம் கடவுளைச் சார்ந்திருக்கிறது என்பானேயல்லாமல் எல்லாம் கடவுளே எனக் கூறமாட்டான். ஏனெனில் நம் இருதயத்திலேயே நன்மைக்கும் தீமைக்கும் போர் நடந்துகொண்டிருக்கிறதல்லவா?

சர்வ வல்லமையுள்ள கடவுள் :-

(6) கடவுள் உலகத்தில் கிரியை செய்து வருகிறார். அவர் உலகை ஆளுகின்றார். அவர் தமது வல்லமையினால் நடத்த முடியாதது ஒன்றுமில்லை, உண்மைதான். ஆனால் அவர் மூடத்தனமான ஒன்றையோ, தீமையான ஒன்றையோ தாம் முன்பு செய்ததற்கு மாறான ஒன்றையோ ஒரு போதும் செய்ய விரும்பமாட்டார். கடவுள் சர்வ வல்லவர் என்னும்போது அவர் படைத்த இந்த உலகத்தில், எது தமக்கு விருப்பமோ? எது அவசியமோ அதையே நிறைவேற்றக் கூடியவர் என்பதே அதன் பொருளாம். அப்படியானால் கடவுள் ஏன் இதை அபாயம் நிறைந்த உலகமாகச் சிருஷ்டித்தார்? எனும் கேள்வி பிறக்கின்றது. இதற்கு முன்னால் கடவுள் ஏன் மக்கள் மரணமடையத் தக்கதாக இவ்வுலகைச் சிருஷ்டித்தார்? எனும் கேள்வியும் கேட்கப்படலாம். கடவுள் மக்களைக் கஷ்டப்படவிட்டு விட்டுத் தாம் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பவர் அல்ல என்று சுவிசேடம் கூறுகின்றது. நமது கஷ்டங்களில் பங்குபற்றவும் அவற்றைத் தாங்குவதற்கு உதவி செய்யவும், நாம் ஏன் கஷ்டங்களை அனுபவிக்கின்றோம் என்பதை ஒரு அளவுக்காவது நமக்குத் தெரிவிக்கவும் கடவுள் விரும்புகின்றார்.

(7) கிறிஸ்தவர்களின் கருத்துப்படி, ஒரு நோக்கத்தைக் கொண்டு கடவுள் நிகழ்த்துவிக்கும் சரித்திரம் ஒரு இலக்கை நோக்கிச் செல்லும் பாதை போன்றது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையும் மரணமும் இப்பாதையின் மையமாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் முன்னால், அதற்காக உலகம் ஆயத்தப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டம் குறுகிக்கொண்டே வருகின்றது. முதலில் மற்றெல்லாச் சாதியினரையும் விட்டு ஒரு சாதி (யூதர்) தெரிந்தெடுக்கப்பட்டனர். பிறகு அந்தச் சாதியில் ஒரு பகுதி தெரிந்துகொள்ளப்படுகிறது. பின் அப்பகுதியில் ஒரு சிறு கூட்டம் தெரிந்துகொள்ளப்பட்டது. கடைசியில் இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு வந்தார். இயேசுவை சிலுவையில் அறைந்துவிட்டோம்; எல்லாவற்றையும் முடித்துவிட்டோமென அக்கால மக்கள் கருதினர். ஆனால், இப்படியாக சுருங்கி வந்த சரித்திரம் உயிர்த்தெழுதலின் பின் விரிவடைகிறது. இயேசுவும் சீஷரும ஆகிய சிறு கூட்டத்துடன் தொடங்கி இன்று உலகம் முழுவதிலும் சுவிசேஷம் போதிக்கப்படுகிறது. இன்னும் சுவிசேஷ வேலை பூர்த்தியடையவில்லை. சுவிசேஷகர சிலர் தெரியாதவர்களுக்குப் போதயாமல் தெரிந்தவர்களைப் பிரித்துக் குழப்புவதிலுமீனகிறார்கள். சுவிசேஷ வேலை பூர்த்தியானால் "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என வபாத்தைகளை ஒழிந்து போவதில்லை" என்று ஆண்டவர் கூறினார். "வானங்கள மடமடவென்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும அதிலுள்ள கிரியைகளும எரிந்து அழிந்து போம" பின்பு "நீதி வாசமாய் இருக்கும புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம்."

8. உலகில் அழிக்கப்படக் கூடியதெல்லாம் அழிக்கப்படும். உலகில் அழிக்கப்பட முடியாத ஏதாவது இருக்கிறதா? ஆம் இருக்கிறது. "நானே அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்". "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவான்". இதுவே நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி. மனிதருக்கும் மற்றெல்லா ஜீவராசிகளுக்குமுரிய சாதாரண ஜீவன மரணத்துடன் ஒழிகிறது, "பாவத்தின் சம்பளம் மரணம், கடவுளுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" கடவுள் ஒருபோதும் மரணமடைவதில்லை, ஆகவே அவரோடு உறவு கொண்டவர்களும் ஒருபோதும் மரிப்பதில்லை. சாதாரண ஜீவன் அழியும். நித்திய ஜீவனோ அழிவதில்லை. ஒரு உதாரணத்தைக் கவனிப்போம். உலோகப் பொருள்களைச் செய்கிறவர்கள், தாம் விரும்பிய உருவத்தைச் செய்து முடிப்பதற்கு அதைப்போன்ற அச்சு ஒன்றை முதலில் உருவாக்குவார்கள். பின்னர் அந்த அச்சில் உலோகத்தை உருக்கி வார்ப்பார்கள். சற்றில் அச்சு தேவையற்றதாகிவிடும. அச்சிலே வார்க்கப்பட்ட உருவம் சேர்த்துக்கொள்ளப்படும். இவ்விதமே நாம் காண்கின்ற, வாழுகின்ற இந்த உலகம் ஒரு நாள தேவையற்றதாகிவிடும். இந்த உலகத்தில் மூலம உருவாக்கப்பட்ட மறுவுலக வாழ்வுக்குரிய, கடவுளை நேசித்துச் சேவிக்கும் ஜீவனகள் தெரிந்துகொள்ளப்படும். அவர்களுடைய "ஜீவன் கிறிஸ்துவுடனே கடவுளுக்குள் மறைந்திருக்கும்". அவர் ஜீவன் உள்ளவரானபடியால் அவருடையவர்களும் ஜீவனுடையவர்களாவார்கள்.

---

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சிமை

[ கலாநிதி கனம் ஜேம்ஸ் மேதர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது தமிழாக்கம்: திருமதி இசபேல் அற்புதநாதன். ]

(முற்டொடர்ச்சி)

யோவான் 8 : 12ல் இயேசு 'நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'. என்று கூறியிருக்கிறார். அவரே உலகத்திலுள்ள அஞ்ஞான இருட்டை நீக்கி மெய்யான ஒளியை ஏற்ற வந்த அருட்தெய்வம் லூக்கா 1 : 79ல் கூறப்பட்டிருக்கிறபடி 'நம்முடைய வழிகளைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும்,' நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலே, வீடுகளிலே சமுதாயத்திலே வெளிச்சத்தையும் சமாதானத்தையும் உண்டாக்கத் தோன்றிய அருணோதயம் இயேசுவே.

கிறிஸ்துவினுடைய போதனைகள் நமக்குப் பெரிய வெளிச்சமாகவும் சகோதரத்துவ அன்பைப் போதிக்கிற ஜீவ ஒளியாகவும் அரசாங்கங்களுக்கிடையே நாடுகளுக்கிடையே சட்டதிட்டங்களிலே சமத்துவத்தையும் கௌரவத்தையும் புகுத்தும் போதனைகளாகவே இருந்தன. பெண்களை இழிவானவர் என்று கருதிய காலம் போய், இயேசுகிறிஸ்து நாதரின போதனைகளின் ஒளியானது பெண்களிடைய சமத்துவத்தையும் கௌரத்தையும் நிலவச்செய்கிறது.

எல்லாவற்றிலும் மேலாக இயேசுவின் போதனைகள் நாங்கள் யாவரும் தேவனுக்கு நன்றியறிதல் உள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றன. தேவன் பலிகளை விரும்புகிறவர் அல்ல. நாங்கள் அவருக்கு காளைகளையும் எருதுகளையும் பலியிடத்தேவையில்லை. நாங்கள் எங்கள் உடன்பிறவாச் சகோதர சகோதரிகளுக்கு எங்களாலான நன்மைகள், உதவிகளைச் செய்வதே அவர் விரும்பும் பலி, தேவன் எங்களுக்கு எப்படிக் கொடைகளை அருளியிருக்கின்றாரோ அவ்வண்ணமே நாமும் நம் சகோதரருக்கு நன்றிக்கடன்களைச் செலுத்தவேண்டும்.

(10) இயேசுவே உண்மையான தேவனின் பிரதிவிம்பமாயிருக்கிறார்.

தேவனை வெளிப்படுத்தவே அவர் மனுச சாயலெடுத்து மனுசனாக வந்து உலகில் பிறந்தார். யோவான் 14:9, யோவான 12 : 45ல் கூறப்பட்டிருக்கிறபடி 'இயேசுவைக் காண்கிறவன் இயேசுவை அனுப்பினவரைக் காணகிறான்.'

(11) இயேசுவே உலகின் முழு நம்பிக்கை :- நாங்கள் ஒரு பிளவுபட்ட ஒற்றுமை இல்லாத எல்லா அநீதிகளும் நிறைந்ததொரு உலகத்தில வாழ்கிறோம். 'பாவம' என்பதற்கு வரைவிலக்கணம 'தேவனிடத்திலிருந்து பிரிதல்' என்பதே. மனிதனின் இடம தேவனுடன் கூடவாழ்தலே. தேவனுடைய ஐக்கியத்தில் ஒன்றிணைந்து, தேவனின வீட்டில தேவனின பிள்ளையாக வாழ்தலே நாம கேடிலிருந்து திரும்புவதற்கேற்றவழி. லூக்கா 15 : 11 — 18 ல் கூறப்பட்டுக்கிற கெட்ட குமாரனின் கதையை நினைவு கூருவோமாக. தூரதேசம் போய் தனது ஆஸ்திகள் எல்லாவற்றையும் கெட்ட சிநேகிதருடன் சேர்ந்து அழித்துக் கெட்டபின் தனது சொந்த வீட்டிற்குத் திரும்பிய போது அங்கே அவனுக்கு மகிழ்ச்சியான வரவேற்பு, அன்பு, சந்தோஷம் ஏற்படுகிறது. இக்கதை நமது உலக வாழ்க்கைக்கு ஏற்ற உதாரணமாக அமைகிறது. நாங்கள் அங்குமிங்கும் சமாதானமின்றிப் பலவித தேவைகளினுல் அலைசடிப்பட்டுத் திரிகிறோம். உண்மையான சமாதானம் தேவனிடத்தில் தான் உண்டு. நாம் அவரை நெருங்குப்போது அவர் நமது உலகப்பிரகாரமான எல்லாவித தேவைகளுக்கும் தீர்வு காட்டுகிறார். 'யேசுவின் போதனைகள்' என்ற பெரிய நூலிலிருந்து நாம் எல்லாவித பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம். பரி. பவுல் ரோமர் 8 : 24-ல் 'அந்த நம்பிக்கையினலே நாம் இரடசிக்கப்படுகிறோம்' என்றும் யோவான் தனது முதலாம் நிருபம் 3 : 3இல் 'அவர்மேல இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுததமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுததிகரித்துக் கொள்ளுகிறான்' என்றும் எழுதியிருக்கிறார்கள்.

இயேசுவே எங்கள் முழு நம்பிக்கையும யேசு எங்கள் ஒருவரையும் கைவிடுகிறவரல்ல என்பதை நாங்கள் முற்றிலும் நம்புகிறோம. யோவான 16 ; 33இல் இயேசு கூறியபடி அவரில எங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்க வேண்டும். இயேசு உலகத்தை ஜெயித்ததை போல நாமும ஜெயிக்கத் திடன் கொளள வேணடும. லூக்கா 21 : 18; லூக்கா 10 : 19இல கூறப்பட்டிருக்கிறபடி சததுருவின் சகல வல்லமைகளில ஒன்றுவது நம்மைச் சேதப்படுததாது என்றும் எங்கள் தலமயிரில ஒன்றுகிலும் அழியாது என்று நாங்கள் நம்ப வேணடும. அவரே எங்கள் பெலனும கேடகமுமானவர். அவரே எங்கள் கோட்டையும் அரணுமானவர். மத்தேயு 21 : 18இல் கூறப்பட்டிருக்கிறபடி வானத்திலும் பூமியிலும சகல அதிகாரமும் எங்கள் தேவனுகிய இயேசுகிறிஸ்து நாதருக்கு அருளபபட்டிருக்கிறது.

(தொடரும்)

*EDITORIAL*

## In Defence of Democracy

*"The TULF had accepted the DDC Scheme, and had contested the elections. The TULF acceptance of the DDC Scheme meant that it was prepared to work with the government in implementing it.*

*If the TULF was fully determined that it would not stop short of anything other than Eelam, it could have very well said — we don't approve of the DDC Scheme".*

We appreciate Minister Thondaman's contribution in Parliament to the Debate on the historic No-Confidence Motion on the Leader of the Opposition which was passed in Parliament on 24-7-81.

Minister Thondaman emphasised the primacy of *reason* over *emotion* and did not fail to point out that an important ingredient of the democratic process, — freedom of speech and expression — which so many have enjoyed in the debate was denied to a fellow member of Parliament, the Leader of the Opposition, who merely wished to make "an explanation" in the House at the commencement of the 'Debate'.

The Minister also made it very clear that he was not standing up to defend anybody's policy but *to defend "democracy"*.

For the first time, we note, in recent history, that a Minister of State and a Deputy Minister have abstained from voting in Parliament on a Motion sponsored by the Governmet Parliamentary Group.

President Jeyawardene, addressing a mass rally at Pelmadulla on 19-7-81 reiterated what he had said on public platforms earlier that there was today complete freedom of expression in the country.

People, he said, had the freedom to express their views in speech and in writing (CDN 21-7-81). The President's notion of free expression in a democracy is reminiscent of Voltaire's classic words:— "I disapprove of what you say but I defend to the death your right to say it"

We are happy that the UNP government policy is the preservation of democratic freedoms. We are also happy that more than one speaker in the course of the No-Confidence Debate on 23-7-81 and 24-7-81 expressed the view that they had nothing against the Tamil people.

But an ominous aspect unfortunately of the Tamil problem today appears to be the attempt on the part of some political leaders (perhaps unwittingly) to separate the Tamil people from their "flag".

The Constitution of Sri Lanka throws a preponderant emphasis on the 'flag'. Proportional representation has added new dimensions to the 'flag'. No citizen of Sri Lanka can enjoy real political status unless he follows a flag — the symbol of his or her political ideology.

The Tamil people since the time of *Thanthai* Chelvanayakam have been following a recognised 'flag' — 'a flag' which represents today the second largest political party in Sri Lanka.

Democracy demands that the Tamil people follow this flag so that they may not slip into the danger of being made (as Dr. M. M. Thomas the Indian Theologian would put it) *objects* of politics and not *subjects* making 'politics'.

The Tamil speaking people have, in the DDC Election on 4-6-81 given to their party an overwhelming mandate to proceed with the *Devolution Scheme* of President Jeyawardene as embodied in the District Development Council Bill which has been passed in Parliament, the TULF voting for it.

This implies unerringly that the Tamil people are *not* considering any alternative but are expecting the TULF to put in, its whole weight with the government in making the Development Council an effective instrument for Tamil self-hood.

In this context, it is *not* necessary for the air to remain so thick with acrimony or the relationship between the two communities, continue to deteriorate so precipitously.

## Anticipatory and Confirmatory Baptism

(FOR COMMENTS AND SUGGESTIONS)

*by* **Dr. Lynn de Silva**

The rite of baptism is the symbol of initiation into the church, the body of Christ; it is the only rite, for which there is scriptural support, by which a person enters into the Christian community.

There is no evidence in the New Testament of any other rite by which a person is incorporated into the body of Christ. Reference is made to Jesus blessing the children as an act of dedication of children (Mk. 10:13-13: Lk. 18:15-17). Facts belie this assumption. It was the custom at that time for parents to take their children, particularly on the first birthday, to the Rabbi and ask for a blessing. This was done as often as necessary. It was a simple blessing and nothing more. Reference is also made to the presentation of Jesus in the Temple (LK. 2:21-25). This was only a rite of purification and redemption of the first born *male* by an offering (Exod. 13:2). It should also be noted that Simeon thanked God and blessed the parents but not the child. It was not a rite of dedication nor of blessing.

The necessity of dedicating infants, a practiee which arose only after the Reformation, is a recognition of the fact that children should be given a place in the life of the Church. Our contention is that, accordling to the scriptures this should be done by baptism. Children born of christian parents are part of the corporate solidarity of the christian community. The Kingdom of God, said Jesus belongs to children (Matt: 10:14; Mk. 10:14, Lk. 18:16). Jesus also said, "No one can enter the Kingdom of God unless he is born of water and the spirit" (John 3:5). The reference here is to John's baptism as well as "spirit" baptism. Baptism may anticipate the gift of the spirit or may be received at baptism. Children being no exception. It is said that John the Baptist from his very birth was filled with the Holy Spirit (Lk. 1:15). There is no reason therefore why children should not be baptized.

Infant baptism has been practised by the church in an unbroken tradition from the third century until the Reformation, and in the case of the Mar Thoma church in India the practice is traced to the Apostolic times — to St. Thomas himself. Some eminent New Testament scholars held that there is evidence of an authority for the practice of infant baptism in the New Testament, even in the gospels. However, infant baptism is said to be wanting in that the element of personal faith is absent in this rite. The most that can be said is that it ts an anticipatory rite.

Infant baptism can be justified if it is followed, at the age of discretion, by a personal confession of faith which confirms what is anticipated in baptism, both the anticipatory act and confirmatory acts being looked upon as together making up one act of initiation.

Infant baptism, understood as the fisrt part or anitcipatory act of the whole action of christian initiation enshrines the essential Christian truth of the priority of God's grace in all things. "You have not chosen me but I have chosen you" (John 15:16). Faith is the response to God's grace and the saving act in Christ and not the condition of it. The important thing in baptism is not what we do, whether we are infants or adults, but what God does. Grace precedes faith. This is the truth enshirned in the symbolism of infant baptism. Infant baptism is the only rite which preserves this truth of the priority of grace and which must be followed by an act of faith.

*(to be continued)*

*For the Record*

### The No-Confidence Motion

The TULF, SLFP and the only Communist Party Member walked out of Parliament on 23-7-81 without participating in the No-Confidence Motion.

The TULF walked out when Mr. Amirthalingam's attempts to make a personal explanation failed.

The SLFP walked out because the Speaker overruled a Motion by Mr. Maithripala Senanayake (SLFP — Madawachiya) that the No-Confidence Motion was not within the scope and ambit of the powers of the House.

The Communist Party Member pointed out that the Motion is being stultified because even it is passed, it would lead to nothing.

Following the ruling given by the Speaker on the point of order, the Motion was moved by Dr. Neville Fernando (UNP — Panadura).

The Motion was passed on 24-7-81 with 121 voting for and two abstentions. Mr. S. Thondaman, Minister of Rural Industrial Development and Mr. Shelton Ranarajah, Deputy Minister of Justice did *not* vote.

*At Rest*

### Dr. Samuel Chinniah

We are sorry to record the death which occurred in Colombo of Dr. Samuel Chinniah (88) of Uduvil on 24-7-81 after a brief illness.

Dr. Chinniah was educated at Jaffna Central College. He passed out as a Doctor from Aberdeen University and practised in Dublin for many years before he came to Sri Lanka.

Dr. Chinniah will always be remembered in Jaffna as the "architect" of the Tellippalai Co-operative Hospital which he built up as a medical institutiion from very small beginnings to be one of the larger hospitals in the suburbs. He worked at this hospital for 15 years.

Dr. Chinniah drew a large number of patients to the hospital chiefly by demonstrating to them through his life and work the healing power of the gospel.

The family mourners were his wife, Dora Gnanamalar (nee John) who was on the staff of Uduvil for many years, his daughter, Padmini Rajadurai (Bishop's College) and son-in-law Nigel Rajadurai.

According to a report sent to us, Dr. Samual Chinniah's father, Dr. William Arunachalam Chinniah was Medical Superintendent at Green Hospital Manipay during World War I.

*In brief*

- *English in Sri Lanka Schools:* A Twelve Member committee which examined closely the State of English teaching in Sri Lankan schools today has recommended that English should be made a compulsary subject at the G. C. E (O/L) and A/L Examinations.
- *The 17th Conference of Sri Lanka Aid Consortium* held in Tokyo on June 20 and July 1st, Sponsored by the World Bank has pledged a total of 834 million U S dollars (Rs. 15, 640 million) to Sri Lanka for the current year.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 31th July, 1981.